முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான்
எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த
மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 திகதி முதல்
சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 திகதி வரை
(06.11.2022 ஞாயிறு முதல் 13.11.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. அவதார ஞான குருவரங்கா
   அகிலம் காக்கவந்த தேசிகா
   அவனியில் அரங்கன் நீ கேட்க
   அகத்திய மகரிஷியும் வார ஆசியாக
2. ஆகவே இந்தியா தமிழகத்தில்
   அறிவிப்பேன் சுபகிருது துலை திங்கள்
   வகையான இருபான்திகதி மேல் இருபாணேழ் திகதிவரை
   வருங்காலம் நடக்கும் பலனாக உரைப்பேன்
3. உரைக்கவே விலைவாசி ஏற்றம்
   உயிரை உலகை அச்சுறுத்தும்
   வரிச்சுமை சகல வசதிவகையும்
   வந்தடைந்து மக்களை அச்சமூட்டும்
4. அச்சமூட்டி ஆளுமைக்கு மேலான
   அவநம்பிக்கை தனை வளர்க்கும்
   அச்சமுற வாலிப காலத்தவர்கள்
   அடிமையென போதைவழி கிடந்து
5. கிடந்து மதுவும் போதை சுகமும்
   கட்டுக்குள் வராத வண்ணம்
   இடர்தரும் இந்தியா தமிழகத்தில்
   இதன்வழி அரசு ஆளுமைகள்
6. ஆளுமைகள் தந்த மதுவிலக்கு
   அமலுக்கு வராமலே பல உயிர்கள்
   வலுவிழந்து வாழ்விழந்து முடிவுறும்
   வதையாக கலியும் மக்களை வதைத்து
7. வதைத்து வாழ்வாதாரம் கெடச்செய்து
   வளர்ச்சிகள் யாவும் முடங்கும்
   பதைபதைக்க வன்கொடுமைகள்
   பலிபாவங்களும் மிகுந்து காணும்
8. காணுகின்ற இந்த நிலைமைகள்
   கட்டுக்குள் வருகின்ற வண்ணம்
   ஞானவான்கள் ஆலோசனைபட
   நம்பிக்கை தரும் வண்ணம் ஆளுமைகள்

9. ஆளுமைகள் கடும் நடவடிக்கை
ஆற்றல்பட கையாளவே தேசமதில்
வலுவிழந்து கெடுதிகள் எல்லாம்
வந்தச்சுவடு தெரியா முடிவுறும்
10. முடிவு காணும் மக்கள் பாதுகாப்புற
முழுமை பெற்ற ஞானிகள் வழி
தேடிவந்து ஆளுமைகள் தானும்
தெரிவிப்பேன் பணிந்து ஆசி பெற
11. ஆசிபெற ஆலோசனை ஏற்று
அறிவிப்பேன் தானதரும தயவுநெறி
ஆசிபட நடக்கவே இந்தியா தமிழகம்
அனைத்திலும் தேறி மாற்றம்பெறும்
வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம் :

சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 ம் நாள் 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 27 ம் நாள் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள கால நிகழ்வுகள் குறித்த வார ஆசி நூலின் சாரம் :

இவ்வுலக மக்களை காத்து வழிநடத்தி மேன்மை பெறச் செய்திடவே இவ்வுலகினில் முருகப்பெருமானின் ஆற்றலாக அவதாரம் புரிந்திட்ட ஞான தேசிகரே மகா குருவே ஆறுமுக அரங்க மகா தேசிகனே தாம் அகத்திய மகரிஷி எம்மிடம் எதிர்காலம் குறித்து கேட்க அகத்திய மகரிஷி யானும் இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் ஐப்பசி மாதம் 20 ம் நாள் 06.11.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் ஐப்பசி மாதம் 27 ம் நாள் 13.11.2022 ஞாயிற்றுக்கிழமை வரை உள்ள காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

வரும் காலங்களில் விலைவாசி ஏற்றம் நாட்டினில் உண்டாகி மக்களை அச்சுறுத்தும் சகல விதமான பொருள்கள் மீதும் வரிச்சுமை அதிகமாகி மக்களுக்கு அச்சம் உண்டாக்கும் மக்கள் ஆட்சியின் மீது அவ நம்பிக்கை அடைய நேரும். வாலிபர்கள் போதைக்கு அடிமையாகி மது போதை கட்டுக்குள் வராமல் நாட்டிற்கு துன்பமாக ஆகிடும். அது இந்தியா தமிழகத்தை பாதிக்கும். அரசு மதுவிலக்கை அமல் படுத்தாமல் தொடர்ந்து நடத்துவதால் பல உயிர்கள் சேதம் ஆகும். மக்கள் துன்பத்திற்கு ஆளாவார்கள். மக்கள் வாழ்விழந்து, வாழ்வாதாரம் கெட்டு வளர்ச்சிகள் முடக்கமாகும். நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் அது பாதிக்கும். போதைக்கு அடிமை ஆனவர்களால் நாட்டினில் வன் கொடுமைகள் அதிகமாகும் பலிபாவங்களும் நாட்டினில் மிகுந்து காணப்படும்.

இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் மாறி கட்டுக்குள் வர வேண்டுமாயின் ஞானவான்களின் ஆலோசனைகளின் துணையுடன் மக்களுக்கு நம்பிக்கை தருகின்ற வண்ணம் ஆட்சி புரிவோர் கடும் நடவடிக்கைகளை எடுத்து ஆற்றலுடன் மக்களை கையாள நாட்டினில் உள்ள கொடுமைகள் கெடுதிகள் எல்லாம் வலுவிழந்து அவைஅவை வந்தசுவடு தெரியாமல் மறைந்து விடும்.

நாட்டு மக்கள் அருள் பாதுகாப்புடன் வாழ்ந்திட வேண்டுமாயின் ஆட்சி புரிவோர் முழுமை பெற்ற ஞானிகளிடத்து பக்தி செலுத்தி முருகப் பெருமானை வணங்கி ஆசி பெற்றால் ஞானிகள்

கூறும் தான தரும தயவு நெறிவழி நடந்திட இந்தியா தமிழகம் எல்லா வகையிலும் முன்னேறி பெரும் மாற்றம் உண்டாகும் எனக் கூறுகிறார் மகான் அகத்திய மகரிஷி.

**–சுபம்–**